தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

ள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 23—2—57 | சனிக்கிழமை | இதழ் 25

தலைநகரில் சிறப்பு மாநாடு!

1956-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களைத் தமிழ்மக்கள் மறந்துவிடமுடியாது. அதிலும், குறிப்பாக சென்னை நகரமக்களின் நினைவிலே அந்தநாள் என்றும் நிலைத்துநிற்கும். அந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள்தான் சென்னை நகரின் கடைவீதிகள் தூங்கிக்கிடந்தன. தமிழகப் பகுதிகளைக் கோட்டைவிட்ட மாநில அரசியலாரின் மந்த புத்திக்குச் சவுக்கடி கொடுத்த நாள்தான் பிப்ரவரி 20! சர்வகட்சியும் அங்கம் பெற்று, அரசியலாருக்கு எச்சரிக்கை விடுத்த நாள்தான் பிப்ரவரி 20!

அதேபோல் **1957 ம் ஆண்டு பிப்ரவரித் திங்களும்** வரலாற்றிலே குறிக்கப்பட வேண்டிய திங்கள்தான். இந்த மாதம் 10-ந் தேதியன்று தலைநகரிலே நடைபெற்ற தி. மு. கழக தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாடு மாற்றுக் கட்சியினரின்—குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் கவனத்தைக் கவர்ந்ததோடல்லாமல் கலக்கத்தையும் ஏற்படுத்தித்தான் இருக்கிறது. பொதுவுடமையினர்கூட சிறப்பு மாநாட்டுக்கு வந்திருந்தனர். இதுவரை தி. மு. கழகத்தைப் பற்றிச் சாதாரணமாக எண்ணிவந்திருந்த காம்ரேட்கள் பலர் மூக்கிலே விரலை வைத்து அப்படியே மெய்மறந்து நின்றிருந்தார்கள்.

குதர்க்க புத்தி கொண்டவர்களும் எதிர்ப்புச் சக்தியை ஏற்க மறுப்பவர்களும்கூட சிறப்பு மாநாட்டுக்கு வந்து ஈடு இணையில்லாத அதிசயத்தில் ஆழ்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அறிஞர் **அண்ணா அவர்களும்** கழக **முன்னணி வீரர்களும்** ஆற்றிய உரையைக் கேட்டு, உணர்ந்து பார்க்கும் அளவுக்கு மாறியிருக்கிறார்கள் மாற்றுக்கட்சித் தோழர்கள் சிலர்.

தமிழகத்திலே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தைத் துவக்கிவைக்க வந்திருந்த நேரு பண்டிதர் ஐலண்டு மைதானத்திலே பேசினார். ஐலண்டு மைதானம் பெரிய மைதானமாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்திலே, ஐந்தாண்டுகட்கு முன்பு தி. மு. கழகத்தின் **முதலாவது மாநில மாநாடு** நடைபெற்ற எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் இப்போது **தேர்தல் பிரச்சார மாநாடு** கூட்டப்பட்ட சிறப்பைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேரு பேசிய கூட்டத்தில் கட்டணம் விதிக்கப்படவில்லை. நமது தேர்தல் பிரச்சார மாநாட்டில் கட்டணம் விதிக்கப்பட்டது. கட்டணம் விதித்திருந்தும், கணக்கற்ற மக்கட் கூட்டம் வந்து, கருத்து விருந்தை அள்ளிக்கொண்டு சென்றதைப் பார்த்த மாற்றுக்கட்சியினர்களில் பலர் மனம் வருந்துவதாகக் கேள்வி. மேலும், பல நாட்களாக அறிவிப்புச் செய்து மாநில மாநாடு நடைபெற்றது. அதனால் அந்த மாநாட்டில் கலந்துகொண்ட வெளியூர்த் தோழர்கள் ஏராளம். ஆனால், இந்தத் தேர்தல் பிரச்சார மாநாட்டை திடீரென்று சென்னையில் கூட்டுவதாக முடிவு செய்யப்பட்டது. குறுகிய கால அறிவிப்பிலேயே சிறப்பு மாநாட்டுக்கு இவ்வளவு கூட்டம் வந்திருந்தது என்றால், ஓரிரு திங்களுக்கு முன்பாகவே அறிவித்திருந்தால் உண்மையிலேயே இடநெருக்கடி வந்திருக்கும். நிலைமையைச் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கும். வெளியூர்த் தோழர்கள் கலந்துகொள்ள முடியாத நிலையிலேயே இந்த அளவு திரள் என்றால், கழகத்தின் வளர்ச்சி பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. எதிரிகளே கணக்கிட்டுக் கொள்வார்கள்.

இன்னொரு உண்மையையும் நாம் மாற்றாரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். எந்த இடத்தில் முதல் மாநாடு கூட்டி, 'தேர்தலில் கலந்து கொள்வதில்லை' என்று முடிவு கட்டினோமோ, அதே இடத்தில் இந்த முறை எமது தேர்தல் பிரச்சாரத்தைத் துவங்கியிருக்கிறோம்.

சிறப்பு மாநாட்டை, பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். ஜனநாயகம் இந்த மாநில சர்க்காரால் சவக்குழியில் தள்ளப்படும் நிலையைச் சுட்டிக் காட்டினார்கள். தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையை பொதுச் செயலாளர் அவர்கள் வாசித்தார்கள். அறிக்கை பலத்த கையொலியுடன் ஏகமனதாக ஏற்கப்பட்டது.

"தி. மு. கழகம் தேர்தல் அறிக்கையை நாளதுவரை வெளியிடவில்லை என்று கத்திக் கொண்டிருந்த காம்ரேடுகளுக்கு அன்று விருந்து கிடைத்தது. அவர்களது முகத்திலே கரியைப் பூசிவிட்டன தேர்தல் அறிக்கையில் உள்ள வாசகங்கள்! எந்தப் பொருளையும் கோதுமை மாவாகக் கருதி இழுத்துப் பார்க்கும் காம்ரேடுகள் தற்போது தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையையும் இழுத்துப் பார்த்து தங்கள் 'வெள்ளி மூக்கு'களால் மோந்து பார்த்து, "இதிலுள்ள பல குறிக்கோள்கள் நாங்கள் நீண்ட நாட்களாகச் சொல்லி வருகின்றவையாகும்" என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றனர். இந்த நேரத்திலே நமது காம்ரேடுகளுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

ஐந்தாண்டுகட்கு முன்னர் **அறிஞர் அண்ணா** அவர்கள் **"உண்மையான பொதுவுடைமைக் கட்சி தி. மு. கழகமே"** என்ற உண்மையைச் சொன்னபோது, அதை ஒப்புக் கொள்ளாமலும், உணராமலும் தாறுமாறாகப் பேசிய மரமண்டைகள், தற்போது 'உண்மையான பொதுவுடைமைக் கட்சியின்' வாசகங்களைப் படித்துவிட்டு, தங்களது கொள்கைகள் என்று ஆர்ப்பரிக்கின்றன. சென்ற காலத்தை மறந்துவிட்டு அதற்குள் எங்கேயோ ஓடுகின்றனர் நமது காம்ரேடுகள்.

சிறப்பு மாநாட்டில் சொற்பொழிவாற்றிய கழகத் தலைவர்களின் உரை, மாற்றுக் கட்சியினரின் மந்த புத்தியை மாற்றியிருக்கும் என்று நம்புகிறோம். அறிஞர் அண்ணா அவர்களின் பேருரையும், பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையுரையும், சொற்செல்வர் சம்பத் அவர்களின் சொற்பொழிவும் நமது கொள்கையை விளங்கிக்கொள்ளாமலிருக்கும் குறைமதியாளருக்குத் தெளிவு ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

சிறப்பு மாநாடு இரவு பத்து மணியளவில் முடிவுற்றது.

—தமிழ்ப்பித்தன்

வடவர் வாழ—தென்னவர் தாழ
ஐந்தாண்டுத் திட்டங்களிலே
அநீதி இழைக்கப்படுகிறது.

தென்னாட்டின் திட்டங்கள்
மறுக்கப்படுகின்றன — குறைக்கப்படுகின்றன.

இந்த அநீதி அழிய - அக்கிரமம் ஒழிய
வளம் பெருக - வாழ்வு மலர

திராவிட முன்னேற்றக் கழக
அபேட்சகர்களுக்கே
ஓட்டுப் போடுங்கள்!

பாடமொழி-ஓர் ஆராய்ச்சி

★ தமிழ்நாட்டில் இனிப் பாடமொழியாகத் தக்கது எது என்பது, காலத்திற்கேற்ற கேள்வி. டாக்டர் மு. வ. குறிப்பிடுவது போல 'இந்தி வருமுன் தமிழ், பல்கலைக் கழகங்களில் இடம் பெற்றுவிட வேண்டும். இங்கே, நமக்கு அப்பாலுள்ள ஓர் ஐரோப்பியர், இம்மொழிப் பிரச்சினை பற்றிக் கூறிய கருத்துக்களைத் தருகிறோம். ★

"**சென்**னைப் பல்கலைக் கழகத்திலும், கல்லூரிகளிலும் கல்விப் பயிற்சி மொழியாக இருக்கத் தகுந்தது எது? கல்லூரி ஆசிரியர்களிடையே, காரசாரமான பல வாதங்கட்குரிய பொருளாக இக்கேள்வி இருக்கிறது.

ஆங்கில மொழிச் சார்பானவர் கருத்துக்கள் :

இந்தியாவிற்கு வெளியே உலகத் தொடர்புகொள்ள மிகுந்த ஆங்கில அறிவு இன்றியமையாததாகும். தமிழைவிட ஆங்கிலம் பயிலுவது ஒருவருக்கு இன்றியமையாதது. தமிழர்கள் தமிழைப் படிக்க வேண்டுமென்பதில்லை. அது தானகப் புரியும். தமிழில் போதிய அறிவு நூல்கள் இல்லை; தமிழில் முக்கியமான கலைச் சொற்கள் இல்லை. தமிழ் மொழி இன்றைய அறிவியல் வளர்ச்சியோடு சமமாக வளரவில்லை. எனவே பல பொருள்கள் பற்றித் தமிழில் சிறிதுகூட எழுத இயலாது.

தமிழ்மொழிச் சார்பானவர் கருத்துக்கள் :

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குட்பட்ட வட்டாரத்தில் பெரும்பான்மையினரின் தாய்மொழி தமிழே. மற்ற மொழிகளை விடத் தாய்மொழிக்கே முதன்மை அளிக்க வேண்டும். தமிழ் நல்ல வளர்ச்சி பெற்ற மொழி; அதில் எக்கருத்தை வேண்டுமாலும் வெளியிடலாம். தேவைப் படும்போது புதிய கலைச்சொற்களைக் கண்டுபிடிக்கலாம்; அல்லது உலகப் பொதுக் கலைச் சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ளலாம். இவ்வளவு நாட்களாக ஆங்கிலம் பயிற்சிமொழியாக இருந்த காரணத்தால் தான், புதிய பல அறிவியல் வளர்ச்சிகளைத் தமிழ் பெறவில்லை. ஆங்கிலம் தமிழ் வளர்ச்சியைத் தடை செய்துவிட்டது; இப்போது அதிலிருந்து தமிழைக் காப்பாற்றும் ஒரே வழி தமிழைப் பயிற்சிமொழி ஆக்குவதுதான். போதுமான அறிவியல் நூல்களைக் கூடிய விரைவில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம். கல்விப் பயிற்சி மொழியாகத் தமிழைப் புகுத்துவதனல் தமிழிலேயே முதல் நூல்களை உருவாக்கவும் அது தூண்டுகோலாகும்.

இவ்விரு சாராரின் கருத்துக்களிலும் சில நல்லனவாக உள்ளன; சில அவ்வளவு நல்லனவாக இல்லை. ஆங்கிலம் பேசாத வெளிநாட்டுக்காரர்களில் ஒருவன் (ஓர் ஐரோப்பியன்) என்ற முறையில் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரை, இயல்பான பயிற்சி மொழியாக இருக்கத் தக்கது தாய்மொழியே என்பது வெள்ளிடைமலை. ஒரு நாட்டின் கல்விமான்களில் பலர் சொந்தத் தாய்மொழியை விடப் பிற மொழியிலேயே வல்லவர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்த நாட்டினரின் தன்மான உணர்வில் உறுதியாகக் குறைபாடிருக்கிறது என்று கூறலாம். மக்களின் மிக்க மதிப்புக்குரிய உடைமைகளில் மொழியும் ஒன்று.

"நம் மொழி நமக்குத் தானக விளங்கும்" என்பதே ஒரு குற்றமாகும். ஒவ்வொரு படித்த மனிதனும் ஆர்வத்தோடும் கடின உழைப்பாலும் பயிற்சியாலும் தாய்மொழியைப் பயிலவும், வளர்க்கவும் வேண்டும். ஆங்கிலேயர்கள் பிரஞ்சுக்காரர்கள் முதலியோர் தங்கள் தாய்மொழியைப் புறக்கணிப்பதில்லை. பிரஞ்சுமொழி நடை வல்ல பேராசிரியராம் '**வால்ட்டேர்**' ஒரு சமயம் பிரஞ்சுமொழி பற்றிக் குறிப்பிடும்போது, "அது ஒரு கடினமான மொழி; அதை ஒருபொழுதும் நான் கற்றுக் கொள்ளமுடியாது!" என்றார். நாகரிக வளர்ச்சிபெற்ற மொழியென்பது எக்கருத்தையும் வெளியிடத் தக்கதாக இருக்க வேண்டும் தமிழில் அத்தகுதி இல்லையென்பது உண்மையானல் அது பாதி செத்தமொழியாகிவிட்ட தென்பதற்கு அறிகுறியாகும்! எனவே இந்தப் பொழுதிலேயே தமிழுக்குப் புத்துயிரளிக்க முயலவேண்டும். பழந்தமிழ்ப் பயிற்சி மூலம் புதிய மொழி வளர்ச்சிக்கான உயிர்ப்பும் வளர்ப்பும் நல்க வேண்டும்.

தேவைப்படுமேல், சில உலக மொழிக் கலைச் சொற்களைச் சேர்த்துக் கொள்வதில் குற்றமில்லை. தமிழ் ஒலிமுறைக்கே அப்பாற்பட்ட, புதிய ஆங்கிலச் சொல் உருவத்தை அப்படியே ஏன் கையாளவேண்டும் என்பதற்குக் காரணம் தெரியவில்லை. பெரும்பாலான கலைச் சொற்களின் வேர் லத்தீன் அல்லது கிரீக்காகும். தமிழில் அக்கலைச் சொற்களை எடுத்துக்கொள்ளும் போது தமிழ் முறைக்கு ஏற்ப மாற்றி, விகுதிகள் முதலியன சேர்த்து ஏன் கூறக்கூடாது? (**Cement**-சிமிந்தி **Kettle**-கேதல், **Bottle** - போத்தல் என்பது போல) சிலாரங்கட்கு முன் ஒரு கிருத்தவக் கோயிலில் மத குருவானவர் "**Missionaries**" என்ற ஆங்கிலச் சொல்லை "மிஷினெரிகள்" என்று அப்படியே தமிழில் சொல்லாமல் 'மிசியோனரிகள்' எனக் கூறக் கேட்டபோது நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். (தமிழனகப் பிறந்தவனுக்கு இன்னும் இந்தத் தன்னுணர்வு வரவில்லை. அவன் ஆங்கில உச்சரிப்போடு பேசுவதையே நாகரிகமாக இன்னும் கருதுகிறன்!) மிசியோனரிகள் என்பது மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் அதன் வேர்ச் சொல்லாக லத்தீனில் உள்ள 'மிசியோனரியஸ்' (**Missionarius**) என்பதுதான்! தமிழின் சிறப்புடன் இது நன்கு பொருந்துகிறது!

கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் தமிழ் நூல்கள் ஒன்றையே - அறிவியல் கலைகள் சம்பந்தப்பட்டவரை துணையாகக் கொண்டு திருப்தி அடையும் நாள் ஒருநாளும் வராதெனநான் நம்புகிறேன். அவ்வளவு மக்கள் தொகையுடைய மொழியில் இன்றியமையாத எல்லாவற்றையும் மொழிபெயர்த்து விடுவதென்பது இயலாத காரியம். பொருட் செலவும் அதிகமாகும்; அவ்வரிய முயற்சிக்கு உழைக்க மக்கட் தொகையும் போதாது.

தமிழ் பயிற்சி மொழியாயிருந்தாலும் ஆங்கிலமும் படிக்கலாம். தமிழ் பயிற்சி மொழியாவதால் ஆங்கிலம் படிப்பது எங்ஙனம் பாதிக்கப்படும்? ஐரோப்பியப் பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் சொந்தத் தாய்மொழியிலேயே படிக்கின்றார்கள். அவற்றுடன் சிறந்தது ஆங்கிலம், செருமன், பிரஞ்சுமொழி நூல்களையும் படிக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பெரும்பாலான கல்வி வல்ல மக்களுக்கு, ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதுமானது. வெளிநாட்டுக்குச் செல்லும் மிகச் சிலருக்குத்தான் ஆங்கிலம் நன்கு பேசத் தெரியவேண்டும். அதுவும் அவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியதே. தமிழ் நாட்டிற்குள் வெளிநாட்டார் வந்தால் தமிழைப் பேசக் கற்றுக் கொண்டு வரவேண்டியது அவர்களது கடமையாகும்; தமிழர்கள் அவர்கள் மொழியைக் கற்க வேண்டுமென்பதில்லை. தமிழர்கள் இக்கருத்தை உறுதியாகக் கடைப்பிடித்தால், பெரு விருப்பம் காட்டினல், எங்களுடைய பிழைகளைத் திருத்தி நாங்கள் தமிழ் பேசக் கற்பதற்கு ஊக்கங் கொடுத்தால், வெளிநாட்டுக்காரர்களாகிய நாங்களனைவரும் இதுவரை தமிழைக் கற்றிருப்போம்! [நாம்தான் எந்த மொழியினர் நுழைந்தாலும், முன்கூட்டியே அவர்கள் மொழியைப் பிழையறக் கற்றுக்கொண்டு வரவேற்கக் காத்திருப்பவர்களாயிற்றே!]

உடனடியாக, எளிதாகச் செய்யக்கூடிய மாற்றம், மாணவர்கள் விரும்பினல் தாய் மொழியிலேயே அவர்கள் தேர்வெழுத அனுமதிப்பதாகும். இது, அவர்களின் பிறப்புரிமையுமாகும்.

அதற்காக ஆங்கிலப் பாட நூல்களை அவர்கள் படிக்கவே கூடாதென்பதில்லை. ஆங்கிலப் பாட நூல்களையே கொண்டு படித்தாலும், தமிழிலும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு சிறு பாட நூலாவது வேண்டும். பாடத்தைப் புரிந்து கொள்ளவும், பாடக் கருத்தைத் தமிழில் வெளியிடவும், அந்நூல்கள் உதவும். தாய்மொழி வழங்கும் எல்லைக்குள் உள்ள பேராசிரியர்கள் தங்கள் தாய்மொழியில் பாடம் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். (ஆங்கிலமும் பாடமாதலால் மாணவர்கள் ஓரளவு ஆங்கில அறிவு பெற்றிருப்பர்) எனவே வெளிநாட்டு ஆசிரியர்கள் ஆங்கிலமொழி மூலம் பாடம் பற்றி விரிவுரையாற்றுவதையும் ஒரு முன்னேற்றமாகக் கருதி ஏற்றுக் கொள்ளலாம். (எம்மொழி மூலம் விரிவுரைகளைக் கேட்டாலும், எம்மொழி நூல்களைக் கற்றாலும், தாய்மொழி மூலமும் விளங்கிக் கொள்ளவும் தாய்மொழி மூலம் தேர்வு எழுதவும் மாணவர்கள் அனுமதிப்பது கல்விக்கும் நலம்; மாணவனுக்கும் நலம். இம்முறை ஐரோப்பிய நாடுகளில் உள்ளது. இம்முறை நம் நாட்டில் அமுலானல், 'நோட்ஸ்'களுக்குப் பதிலாகத் தமிழ்ப் பாட நூல்கள் வெளிவந்து உதவும்)

மாணவர்கள் ஆங்கில விரிவுரைகளையும் கேட்டு ஆங்கில நூல்களையும் படிப்பதால் தமிழில் அவற்றை வெளிப்படுத்த, அம்மாணவர்களால் இயலாது எனச் சிலர் இங்கே கூறுகின்றனர். இது மிகவும் விந்தையானது. இது தமிழ் ஒரு பிற்பட்ட மொழியென்பதையே காட்டும். இது உண்மையானல் தமிழ் வளர வேண்டுமென்றுதான் நாம் கூறவேண்டும். அல்லது தாய்மொழியில் எக்கருத்தையும் வெளியிடுமளவு அதனை வளர்க்காத சோம்பேறிகள் தமிழர் என்றால், இது கடுங்குற்றம் என்று சொல்லவேண்டும். மாணவர்கட்குத் தாய்மொழியில் கருத்தறிவே இல்லை, வெறும் சொற்களே தெரியுமென்றால் இந்நிலை வருந்தத் தக்கதாகும்.

மாணவர்கள் பள்ளிகளில் தமிழிலும், கல்லூரிகளில் ஆங்கிலத்திலுமாக இருமொழி மூலம் பயிற்சி பெறுவதால், அவர்களுக்கு ஒரு மொழி கூடச் சிறிதும் தெரியவில்லை. எண்ணத்திற்கும் மொழிக்கும் உள்ள ஒட்டிய தொடர்புகளை அறிந்தவர் யாரும் இத்தகைய மொழி மாறுதல்களால் மாணவர்களின் சிந்தனை எவ்வளவு பாதிக்கப்படுமென்பதை அறியாமலிரார். எனவே, ஒன்று பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலமே பயிற்சி மொழியாக வேண்டும். இதனை மொழிப் பற்றுள்ள எவரும் விரும்பமாட்டார் என நம்புகிறேன். அல்லது, கல்லூரிகளிலும் தமிழே பயிற்சி மொழியாக வேண்டும்." ★

மூலம் :
By I. W.
Tamil Culture Vol. II-No. 2.

தமிழில் :
தமிழண்ணல்.

எண்ணம்

மலர் 3 ‖ 23—2—57 ‖ இதழ் 25

ஐயோ அமைச்சரே!

நாணயமாகவும் நேர்மையாகவும் நடந்துவருவதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினர் செய்கின்ற அர்த்தமற்ற செயல்களுக்கும் பண்பற்ற வெறியாட்டங்களுக்கும் ஒரு அளவே கிடையாது என்ற உண்மையை சமீபத்திய நிகழ்ச்சி ஒன்று நிரூபித்திருக்கிறது.

தங்களிடம் நியாய வாதங்கள் தவழ்ந்து வருவதாகவும், தாங்கள் மேதைகள் என்றும் சொல்லிக்கொண்டு தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினரை அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் கூட்டங்களில் யாராவது கேள்வி கேட்டுவிட்டால் தொலைந்தது. அவர்களுடைய அறுபத்திரண்டுவயது அனுபவமும், 'தியாக வரலாற்றின திருத்தன்மையும்' விரைவில் ஓடிச்சென்று எங்கோ ஒளிந்துகொண்டு விடுகின்றன. சப்த நாடியும் தந்தியடிக்க ஆரம்பித்து விடுகிறது. உண்மையிலேயே பொதுக்கூட்டங்களில் எதிர்க்கட்சிக்காரர்களோ அன்றி வேறெவருமோ கேள்விகள் கேட்டால், பொறுப்புள்ளவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லத்தான் செய்வார்கள். கேள்வியில் ஏதேனும் விஷமம் தொக்கியிருந்தாலும்கூட 'விஷமமான கேள்வி, இதற்கு நான் பதில் சொல்லமாட்டேன்' என்று சொல்லலாம். ஆனால், கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் திண்டாடும் 'பெருமக்கள்' எப்படியாவது தப்பிக்கத்தான் பார்க்கிறார்கள். அதற்குத் தங்களது தடபுடல் தர்பாரைக் காட்டுகிறார்கள். இந்த 'மகத்தான காரியம்' சமீபத்தில அமைச்சர் சுப்ரமணியனார் திருவாய் மலர்ந்தருளிய ஒருகூட்டத்திலே நடைபெற்றிருக்கிறது.

அவர் பேசிக்கொண்டிருந்த கூட்டத்திலிருந்த சிறுவன் ஒருவன் கேள்விச் சீட்டைக் கொடுத்தானும். அதைப் படித்த சுப்ரமணியனார் உடனே கேள்விக்கு சமத்காரமாகப் பதில் சொல்லியிருப்பார் என்றுதான் விஷயம் தெரியாதவர்கள் எண்ணுவார்கள். ஆனால், சுப்ரமணியனார் அப்படிச் சொல்லவில்லை. "யார் இந்தச் சீட்டைக் கொடுத்தது? அந்த ஆசாமியை வரச்சொல்" என்று ஆத்திரத்துடன் அந்தச் சிறுவனை மிரட்டியிருக்கிறார். உடனே அவரது போலீஸ் படை அந்தச் சிறுவனைக் கைது செய்திருக்கிறது.

அதன்பின்பாவது கேள்விக்குப் பதில் சொன்னாரா என்றால் அதுதான் இல்லை. கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற நியதிகூட அந்தக் குணசாலிக்குத் தெரிந்திருக்காது. கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாவிட்டால், நேர்மையாக, நாணயமாக,'தெரியாது' என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். அதை விட்டுவிட்டார். சிறுவனை மிரட்டுவதன் மூலம் தான் சாமர்த்தியசாலி என்பதை நிரூபித்துக்கொண்டதாகத் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார் அமைச்சர்.

கேள்வி கேட்டது யார் என்றுகூடத் தெரியாத நிலையில், கேள்விச் சீட்டைத் தந்த சிறுவனை மிரட்டியதில் அர்த்தமே இல்லை. இல்லை, கேள்வியைக் கேட்டவனே சிறுவன்தான் என்ற செய்தி உண்மையென்றால், ஒரு சிறுவனின் கேள்விக்குக்கூடப் பதில் சொல்லமுடியாத—பதில் சொல்லத் தெரியாத பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கிறார் அமைச்சர் சுப்ரமணியம் என்ற உண்மை நமக்குப் புலப்படுகிறது. ஊரையும், உலகத்தையும் இனியும் நெடுநாட்களுக்கு ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதைக் கேள்விக்கணைகள் தெரிவித்து வருகின்றன.

இதைவிட இன்னொரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. சுப்ரமணியனார் பேசுவதற்கு ஏற்பாடாகியிருந்த கூட்டத்திற்கு மக்கள் வரவில்லையாம். அதன் காரணமாக,அந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

ஐயோ அமைச்சரே! தேர்தலுக்கு முன்பே உங்களுக்கு இந்தக் கதியா? ★

அறிவிப்பு

தென்றல் அலுவலகத் தோழர்கள் அனைவரும் தோழர் கண்ணதாசன் போட்டியிடும் திருக்கோஷ்டியூர்த் தொகுதிக்குத் தேர்தல் பணியாற்றச் செல்வதால் 2-3-57ந் தேதி இதழ் வெளிவராது. 9-3-57ந் தேதி இதழ் வழக்கம்போல் வெளிவரும்.

★ ★ ★

தமிழ் காட்டும் நல்லுலகு :

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

— கவிஞர் முடியரசன் —

செந்தமிழ்க்குக் காவலரே! சிதம்பரநா தப்பெரியீர்!
பைந்தமிழின் பாடலுக்கோர் பரம்பரையைப் படைத்தவரே!
இந்தக் கவியரங்கில் எழுந்தருளும் கவிமணிகாள்!
வந்து செவிமடுப்பீர்! வணங்கிக் கவிசொல்வேன்;
ஓங்கும் மலைக்குகையில் உயர்ந்த மரக்கிளையில்
ஆங்காங்கே தனிமனிதன் ஆர்ப்பரித்து வாழ்ந்துவந்தான்
கூட்டு வாழ்வறியான் கொல்லும் வினைபுடையான்
காட்டு வாழ்வறிவான் காணும் விலங்கினத்தை
வேட்டைத் தொழில்புரிந்து வேகாத் தசையுண்பான்
காட்டு நெருப்பிடையே கருகிக் கிடந்தவொரு
ஆட்டின் தசைசுவைத்தான் அடடா! சுவைகண்டு
போட்டுப் பொசுக்கிப் புசிப்பதுவே தொழிலானான்;
வனவிலங்கை ஓர்நாள் வளர்நெருப்பிற் சுடுங்காலை
அனல்சிறிது தாக்கியதால் 'ஆஊ'என் றலறிவிட்டான்
உள்ளத் துடிப்பை உணர்த்தும் ஒலிக்குறிப்பைத்
தெள்ளத் தெளிந்துணர்ந்தான் திகட்ட அந்நாளில்;
பக்கத்துக் காடுறைவோன் பலநாள் வருதலிலான்
புக்கான் ஒருநாள் புதுமனிதன் வரவுணர்ந்து
உள்ளத் தெழுமகிழ்ச்சி உந்தத் தலையசைத்து
மெள்ளத்தன் வாயிதழை 'வா'வென் றசைத்துவிட்டான்;
மற்றொருநாள் வேறொருவன் மனம்வருந்தச் செயல்செய்தான்
உற்றெழுந்த சீற்றம் உந்துதலால் உள்ளுணர்ச்சி
சுற்றிச் சுழன்று சூடேறிப் 'போ'வெனும்சொல்
பட்டுத் தெறித்ததுகாண் பதறும் அவனுதட்டில்;
இவ்வண்ணம் ஓரெழுத்தால் இயலும் மொழிகண்டான்
செவ்வியநன் மொழிஎன்று செப்பும் முறையாகத்
தொகைவகையாய் விரிவினதாய்த் தொல்பழமைக் காலத்தே
வகைசெய்தான்; அம்மொழியே வளர்தமிழாய்க் காண்கின்றோம்
தனிமுதலாம் அந்தத் தமிழ்காட்டும் நல்லுலகு
துனிமிகுத்த நாடெல்லாம் தொழுதேத்தும் வழிகாட்டி;
யாதும்நம் ஊரேயாம் யாவரும்நம் கேளிரென்ற
தீதில்லா இவ்வுலகைத் தெளிதமிழே காட்டிற்றுப்
போருலக வெறியர்க்குப் புத்திவர நெறிகாட்டி
ஒருலக வழிகாட்டும் உயர்மொழிதான் எங்கள்தமிழ்
என்னும்போ துடல்சிலிர்க்கும் எலும்பெல்லாம் நெக்குருகும்
உன்னும் உளங்குதிக்கும் உடலெல்லாம் தான்குதிக்கும்;
இன்னும்நாம் அவ்வுலகை ஏறிட்டும் பார்த்திலமே
என்னும்போ துளம்வருந்தி இரங்கலால் என்செய்வோம்!
இனியேனும் அவ்வுலகை இங்காக்க முற்படுவோம்
முனியாமல் அவ்வுலக முழுப்பொருளும் காண்போம்நாம்;—
யாதும்நம் ஊரென்றால் ஏதிலர்தம் நாடெல்லாம்
சூதுமுறை செய்து சுருட்டி விழுங்குவதா?
யாதும்நம் ஊரென்றால் ஏதிலர்க்கு நம்நாட்டைச்
சூதுநெறி யறியாமல் சுருட்டிக் கொடுப்பதுவா?
அன்றன்று பேதைமையாம்; அவ்வவர்க்கு மொழியுண்டு
தொன்றுதொட்ட பண்புண்டு சொல்வதற்கு நாடுண்டே
இவ்விவற்றால் பகையின்றி எதிர்ப்பின்றிப் பிறவற்றை
வவ்வும் மனமின்றி வாழும் நெறியறிந்து
நட்புறவால் உளமொன்றி நடப்பதுவே அதன்பொருளாம்
பெட்புறுத் தமிழ்காட்டும் இவ்வுலகைப் பேணுவம்நாம்;
அனைவரும்நம் கேளிரென்ற அம்மொழியும் அப்படியே
இனம்பலவாய் வாழ்ந்தாலும் இறுமாந்து பகைகொண்டு
விலங்கினத்தின் கீழினமாய் விளையாடித் திரியாமல்
குலங்கருதி மேலென்றுங் கீழென்றுங் குறியாமல்
அவ்வவர்தம் நெறிபோற்றி அன்பொன்றே குறியென்று
செவ்வியநன் மனங்காத்துச் செயலறமும் மிகக்காத்துத்
தோழமையால் ஒன்றுகித் தூய்மையொடு உறவாகி
வாழ விழைகஎன வகுத்ததுவே அதன்பொருளாம்;
சாதிச் சழக்குண்டு சமயப் பிணக்குண்டு
மோதிப் பகைக்க முரண்பட்ட அனைத்துண்டு
கீழான இக்குணத்தில் கேளிர் எனுமெண்ணம்
பாழாம் நிலையன்றிப் பண்படுமோ நீர்சொல்லும்!
பேரறிவு படைத்தோம்நாம் பேசுகின்றோம்; பகுத்துணரும்
ஓரறிவு தனையிழந்தோம் உயிர்க்கின்றோம் அந்தந்தோ!
ஊர்காத்து நகர்காத்(து) உயர்நாடு தனைக்காத்துப்
பார்காத்து யாதும்ஊர்ப் பண்புணர்ந்து மிகக்காத்துத்
தற்காத்துத் தமிழினமுங் காத்துலகம் கேளிர்என்ற
சொற்காத்து **நல்லறிஞர் சூழ்துணையால் நாம்வாழ்வோம்!**
வளைத்த இருள்கிழித்து வாடைப் பனிநீங்க
முளைத்த இளம்பரிதி முகங்கண்டு வணங்குகின்றோம்;
குழைத்தெடுத்த பொங்கலுண்டு குலவிக் களிக்கின்றோம்
உழைப்பின் பயன்தருநாள் ஊரெல்லாம் புதுக்குநாள்
தைத்திருநாள் இத்திருநாள் தமிழ்காட்டும் நல்லுலகில்
வைத்துமனம் வாழ்வோம் மகிழ்ந்து.

தை முதல்நாளன்று (14 1-57) பேராசிரியர் அ. சிதம்பரநாதனார் தலைமையில் நிகழ்ந்த திருச்சி வானொலிக் கவியரங்கில் பாடப் பெற்றது.

★ ★ ★

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின்

கொலை, கொள்ளை பட்டியல்

2

1949-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம் தேதி அன்று ஹவுரா ஜில்லா, ஸங்தோஷ்பூர், பி. எஸ். டோம்ஜுரைச் சார்ந்த மாலிஸி மன்னு என்பவர் விவசாயிகள் இயக்கத்தின்போது போலீசாருக்கு உதவி புரிந்தவர். 6-4-1949ல் இரவு 10 மணிக்கு, அவர் தம் வீடு நோக்கி வரும்போது கம்யூனிஸ்டு களால் மிருகத்தனமாகக் கொல்லப் பட்டார். அவருடைய உடல் சிதைக்கப்பட்டு, ரெயில்வே லயனில் கிடத்தப்பட்டது.

லாயல்கஞ்ச் (பி. எஸ்.) கக்ட்வீப், 24 பர்கானங்களில் 1949ம் வருஷம் ஜூன் மாதம் 2, 3 தேதிகளில் இரவு கிருஷிக் சமிதி (இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தது) அங்கத்தினர்கள் சுமார் 100 பேர் சேர்ந்து தடிகள், ஈட்டிகள் முதலிய ஆயுதங்களோடு 'கச்சரிபாரி' என்னுமிடத்தைச் சார்ந்த துவாரகநாத் சாமந்தா என்பவரைத் தாக்கிக் கொடுமைப்படுத்தினர். 'லாயல்கஞ்ச்' என்ற இடத்திலிருந்த தேவேந்திரநாத் ஜானா என்பவரின் வீட்டையும் தாக்கி, அங்கே தேவன் ஜானு, அவரது மனைவி பூதிஜானு முதலியவர்களைப் பிடித்துக்கொண்டு சென்றுவிட்டனர். வீட்டிலிருந்த மற்றவர்களும் மிகக் கடுமையாக அடிக்கப்பட்டார்கள். தேவன் ஜானுவும், அவருடைய நர்வானும் கம்யூனிஸ்டுகளிடமிருந்து தப்பமுடிந்தது. பிறகு, தாக்கிய கோஷ்டியினர் மன்மத ஜானு, பூதி ஜானு ஆகியோரை விட்டுச் செல்ல அனுமதித்தனர். தேவன் ஜானுவின் தாயார் கொல்லப்பட்டு, அவருடைய பிரேதம் தூக்கிச் செல்லப்பட்டது.

1949ம் வருஷம் ஜூன் மாதம் 21ம் தேதி அன்று பிர்பூம் ஜில்லா, முஹமத்பஜாரைச் சேர்ந்த 'டம்ரா' என்னுமிடத்தில் ஜூன் 21ம் தேதி கம்யூனிஸ்டுகள் கூட்டம் நடத்தி, பணக்காரர்கள், ஜோடுதார்கள் ஆகியோரின் வீடுகளையும் களஞ்சியங்களையும் கொள்ளையடிக்குமாறு அவர்கள், தம்மைப் பின்பற்றும் மக்களைத் (அவர்களில் பெரும்பாலோர் ஸந்தால்கள் ஆவார்கள்) தூண்டினர். அங்கே இருந்த பதார் ஜானு என்ற ஜோடுதார் இதை எதிர்த்தார். கம்யூனிஸ்டுகள் அவரைத் துரத்திச் சென்று, இம்ஸித்து அவருடைய வீட்டையும், களஞ்சியத்தையும் கொள்ளையடித்தனர்.

1949ம் வருஷம் ஜூலை மாதம் 24ம் தேதி அன்று மித்னபூரைச் சேர்ந்த கர்பெடா ஜில்லாவிலிருக்கும் நமாஜமா (பி. எஸ்.) என்னுமிடத்திலுள்ள அபெட்கான் என்பவரின் வீட்டை ஜூலை மாதம் 24ம் தேதியன்று சுமார் 20 கம்யூனிஸ்டுகள் கொள்ளையடித்து, அவருடைய சகோதரர்கள் ஹபீப்கான், அவரது மனைவி முதலியவர்களைக் காயப்படுத்தி அவர்களின் ஜங்கம சொத்துக்களையெல்லாம் அபகரித்துச் சென்று விட்டனர்.

சிப்பூரில் (ஹவுரா) செப்டம்பர் மாதம் 12ம் தேதி பகல் 12 மணிக்கு நான்கு கம்யூனிஸ்டுகள் ஸ்டென் துப்பாக்கிகள், சுழல் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் முதலிய ஆயுதங்களுடன் ஒரு வாடகை மோட்டாரில் ஏறிக்கொண்டு, டிரைவரை துப்பாக்கிகளைக் காட்டி பயமுறுத்தி, வண்டியை ஹவுராவிலுள்ள இம்பீரியல் பாங்கியின் சிப்பூர் கிளை நிலையத்துக் கொண்டு சென்றனர். பாங்கியில் திடீரெனப் புகுந்து ஆயுதங்களைக் காட்டி, பாங்கி சிப்பந்திகளைச் சுடுவதாகப் பயமுறுத்தி, அங்குள்ள கஜானாவைக் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டனர். அதற்குமுன்பே அங்கிருந்த ஆயுத பாணியான நர்வானைத் தாக்கி, அவனிடமிருந்த துப்பாக்கியையும், வெடிமருந்தையும் பிடுங்கிக் கொண்டனர்.

கல்கத்தா

(மேற்கு வங்காளம்)

கல்கத்தாப் பகுதியில், 1949ம் வருஷம் ஜனவரி மாதம் 18ம் தேதி அன்று கம்யூனிஸ்டுகள் தலைமைக்கு உட்பட்டு, அவர்களால் தூண்டப்பட்ட சிலர் அநேக இடங்களில் ரஸ்தாக்களை அடைத்துவிட்டு, சுமார் அரை டஜன் டிராம் வண்டிகளுக்கும், அரசாங்க பங்களாக்களுக்கும் தீயிட்டனர்; போலீஸ் படைகளைத் தாக்கினர். விசுவாசமாக இருந்த டிராம், பஸ் தொழிலாளர் மீது வெடிகுண்டுகளையும், மற்ற ஆயுதங்களையும் வீசினர்.

விஞ்ஞானக் கலாசாலையின் எதிரில் உள்ள ஸர்க்குலர் ரோடு, சீர்டா ரயில்வே பராக்குகளுக்கு எதிரில் உள்ள மேல் சர்க்குலர் ரோடு, 'அஷுடோஷ் கட்டிடம்', வைத்தியக் கல்லூரி ஆகியவற்றுக்கு முன்னேயிருக்கும் காலேஜ் தெரு, ஆகிய இடங்களில் 1949ம் வருடம் ஏப்ரல் மாதம் 28ம் தேதி அன்று கம்யூனிஸ்டுகள், மறுபடியும் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்ய முயன்றார்கள். அதாவது டிராம்கள், பஸ்கள் முதலியவற்றின் மீது வெடிகுண்டுகள், பட்டாசுகள் வீசி அவற்றிற்குத் தீயிடவும், பிரயாணிகளுக்குக் காயமேற்படுத்தவும் செய்தார்கள்.

மாடின்ரோ பகுதியில் 1949ம் வருஷம் மே மாதம் 12ம் தேதி அன்று விப்டன் கம்பெனி தொழிலாளர்கள், கம்யூனிஸ்டுகளின் தூண்டுதலின் பேரில் வேலைநிறுத்தம் செய்தனர். அதற்குமேல் பொது வண்டிகள் மீது நாட்டு வெடிகுண்டுகள், ரசாயன பல்புகள், அக்கினித் திராவகம் ஆகியவற்றை வீசினர். அதன் விளைவாக 3 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயத்திற்காளாயினர். ஒரு லாரியும் சேதமாகியது.

1949ம் வருஷம் ஜூன் மாதம் 3ம் தேதி அன்று கம்யூனிஸ்டுகளால் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் வங்காள மண்பாண்டக் கம்பெனியின் தொழிற்சாலையைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்த இயந்திரங்களையும், ஸ்டோர்களையும் அழித்தனர். மேஜை நாற்காலிகளுக்கும், தஸ்தாவேஜுகளுக்கும் தீ வைத்தனர். அதிகாரிகளை இரக்கமின்றித் தாக்கினர். அதற்குப் பின், தாக்கப்பட்டவர்களைக் காப்பாற்றச் சென்ற போலீஸ் கோஷ்டியின் மீது வெடிகுண்டுகளை வீசிவிட்டுத் தப்பியோடினர்.

ராணுவ அணிவகுப்பு மைதானத்தில் 1949ம் வருஷம் ஜூலை மாதம் 14ம் தேதி அன்று பிரதம மந்திரி பண்டித நேரு பேசிக்கொண்டிருந்த கூட்டத்தில் வெடிகுண்டுகளையும், பட்டாசுகளையும் வீசிக் குழப்பம் விளைவிக்க கம்யூனிஸ்டுகள் முயன்றனர். போலிசார் மீது எறியப்பட்ட மிகவும் அபாயகரமான ஒரு வெடிகுண்டு வெடித்ததன் காரணமாக ஒரு கான்ஸ்டபிள் கொல்லப்பட்டதோடு, மூன்று பேர் காயத்திற்குள்ளாயினர். காவல் செய்து வந்த போலீஸ் கோஷ்டியொன்றின் மீது, கம்யூனிஸ்டுகள் கைத்துப்பாக்கியால் சுட்டனர். எதிர்பாராதவிதமாகக் குறிதவறி விட்டது.

(இது இந்திய சர்க்காரின் உள்நாட்டு இலாகா வெளியிட்ட குறிப்புகளின்படி.)

கல்கத்தாவில் ஏப்ரல் 27-ந் தேதி, சிறையிலிருக்கும் கம்யூனிஸ்ட் கைதிகளின் உண்ணாவிரத 'தியாகத்தை'ப் போற்றும் பொருட்டு, பெண்கள் ஊர்வலமொன்று 'கைதிகள் தினம்' என்ற பெயரில் வந்தது. இவர்கள் 144 தடையுத்தரவை மீறிய காரணத்தாலும், போலிசாரோடு கைகலப்பு ஏற்பட்டதாலும், இறுதியில் போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதை ஆவேசமாகக் கண்டித்து கல்கத்தா நகர் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட துண்டுப் பிரசுரம் இது:

"தோழமை மிக்க சகோதரர்களே!

நேற்றையதினம் கல்கத்தா தெருக்களிலே காங்கிரஸ் அரசாங்கம் பெண்களைக் கொன்றது. மற்றும் இளைய பிள்ளைகள், மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரையும் கொலை செய்தனர்.

மாணவர்களே, தொழிலாளர்களே! பொதுமக்களே! உங்களுடைய தாய்மார்கள், சகோதரிகள் ஆகியோரின் ரத்தத்தில் கல்கத்தா நகர மண் நனைந்துள்ளது. அந்த மண், "பெண்களைக் கொன்றவர்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ளுங்கள்!" என்று உங்களை அறைகூவி அழைக்கிறது.

தொழிலாளச் சகோதரர்களே! எந்தத் தொழிலாளர்கள் தம்முடைய உடல் உழைப்பைக்கொண்டு கல்கத்தாவின் தெருக்களை அமைத்தார்களோ அதே தொழிலாளர்களின் மண்டைகளை அந்தத்தெருக்களிலேயே கொலைகார காங்கிரஸ் அரசாங்கம் துப்பாக்கி முனைகளைக் கொண்டு சுக்கு நூறுக்குகிறது. **உங்களுடைய சகோதரர்களின் மரணத்துக்காக வஞ்சம் தீர்த்துக் கொள்ளுங்கள்!** கொலைகாரப் பாவிகளிடமிருந்து துப்பாக்கிகளைப் பிடுங்கிக் கொள்ளுங்கள்! ஹர்த்தால்களை அனுஷ்டியுங்கள்! தாக்குதல்களை நடத்துங்கள்! ரத்த தாகம் கொண்டலையும் அரசாங்கத்தின் தலைமீது லட்சக்கணக்கான தொழிலாளர்களின் சம்மட்டிகள் இடியைப் போல் விழட்டும்!

அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து வீரப் போர் புரிந்த அந்தக் கைதிகள் 8 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கையை ஆதரிப்பதற்காக, கல்கத்தாவிலுள்ள ஆண்களும் பெண்களும் கூட்டம் போட வெளியே வந்தனர். ஒரு மூலையிலிருந்து, காங்கிரஸ் சேவாதளத்தைச் சேர்ந்த பயிற்சி பெற்ற நாய்கள் தெருவிலிருந்த பெண்களைத் தாக்கி, சோடாபுட்டிகளையும், வெடிகுண்டுகளையும் வீசலாயினர். மற்றொரு முனையில் ஆயுதம் தாங்கிய போலிஸ் படை வந்து, தவிரக்கமில்லாமல் ஆண்களின் மீதும், பெண்களின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மூன்று பெண்கள் அந்தக் கணமே கொல்லப்பட்டனர். அதன் பிறகு மேலும் ஐந்து ஆண்களும், பெண்களும் இறந்தனர்.

இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் ஜனங்களைப் பட்டினி போட்டும், ஜீவனத்தைக் கெடுத்தும், பெண்களைக் கொன்றும், தான் மாத்திரம் வாழ விரும்புகிறது. இந்த சர்க்காரின் தலைவர் பிரிட்டிஷ் அரசருக்குச் சேவகம் செய்ய பிரிட்டனுக்கு ஓடினார். அவருடைய கொலைகார அரசாங்கம் அவிழ்த்து விட்டிருக்கும் கும்பல்கள், இந்நாட்டின் ஏழைத் தொழிலாளிகள், பெண்கள், மாணவர்கள் ஆகியோரைக் கொலை செய்கின்றன.

எனவே தோழமை மிக்க பொது ஜனங்களே! எழுங்கள், விழித்துக்

★ சந்தி சிரிக்குது பார்! சமுதாயம் தூற்றுது பார்! ★

திருக்கோஷ்டியூர்த் தொகுதி வாக்காளர்களுக்கு!

மார்ச் முதல் தேதி

சென்னை சட்டசபை தி. மு. கழக அபேட்சகர்

தோழர் கண்ணதாசன்

அவர்களுக்கு

உதயசூரியன்

சின்னத்தில்

ஓட்டுப் போட்டு ஆதரியுங்கள்.

—தி. மு. க.

அந்நாளில் செய்திட்ட அழிவுச் செயல்களெல்லாம்

கொள்ளுங்கள்! இந்த அபாயத்தை ஒழியுங்கள்! மனித வேடம் பூண்டு திரியும் இந்த மிருகங்களை ஒழித்துக் கட்டுங்கள். உங்கள் தாய்மார்கள், சகோதரிகள், ஆகியோரின் ரத்தத்திற்காக இவர்களைப் பழி தீர்த்துக் கொள்ளுங்கள்! ஹர்த்தால்களை அனுஷ்டியுங்கள்! தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் செய்யுங்கள்! ஊர்வலம் நடத்துங்கள்! 144-வது பிரிவின் தடை உத்தரவை மீறுங்கள்! போலீஸ் ராணுவப் படைகளின் நடமாட்டத்தை நிறுத்துங்கள். அரசாங்க பஸ்களையும், பிரிட்டிஷாருக்குச் சொந்தமான டிராம் வண்டிகளையும் தீயிட்டுக் கொளுத்துங்கள்! கல்கத்தா முழுவதையும், வங்காளம் முழுவதையும் நெருப்புக்கு இரையாக்குங்கள்!

தங்கள் தோழமையுள்ள,
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,
கல்கத்தா
யூனிட்

மேலே கண்ட பிரசுரத்திற்கு 'காம்ரேடு'கள் மூன்றுவிதத் தலைப்புகள் கொடுத்துள்ளனர். அது இது:

- தாய்மார்கள், சகோதரிகள் ஆகியோரின் கொலைக்குப் பழி வாங்குங்கள்!
- தொழிலாளிகளைக் கொன்றதற்காகத் தக்க பதிலளியுங்கள்!
- கொலைகாரக் காங்கிரஸ் அரசாங்கத்தைத் தாக்கி, பேய்க்குணம் படைத்த மந்திரிகளைக் கவிழ்த்து வரும் 'பிதன்' அரசாங்கத்தை ஒழியுங்கள!
- ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும், ஒவ்வொரு தெருவிலும் கண்டன ஊர்வலங்கள் நடைபெறுமாறும் செய்யுங்கள்!
- பிற்போக்கான காங்கிரஸ் தலைவர்களைத் தண்டியுங்கள்!

சுதந்திரத்திற்காகப் போராடும் இந்த வீரர்களைக் கொன்றவர்கள் யார்?

இந்தப் புரட்சிமிகு வீரர்களைப் [1]பிதன்ராய் கொன்றார். [2]ஆர். குப்தா, [3]ஹைதர், மற்ற போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் அவர்களைக் கொன்றனர். பிதன், [4]நளினி, டட், மஜும்தார், மந்திரி சபையிலுள்ள மற்ற அங்கத்தினர்கள் ஆகியோர் அவர்களைக் கொல்ல ஏற்பாடு செய்தனர். காங்கிரஸ் தலைவர்கள், கள்ளமார்க்கட் வியாபாரிகள், முதலாளித்துவ காங்கிரஸின் மீது துதிபாடுபவர்கள் ஆகியோர் இந்தக் கொலைக்குரிய சூழ்நிலையை உண்டாக்கித் தந்தனர்.

ஆகவே, தொழிலாளர்களே! விவசாயிகளே! மாணவர்களே! பொதுமக்களே! வங்காளம் பூராவிலும் அவர்கள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளுங்கள்! அந்தக் கொலைகாரர்களைத் தாக்கிவிடுங்கள்! இந்தக் கொலையாளிகள் வாழ அச்சகத்தின் பெயர் பொறிக்கப்படாத சில துண்டுப்பிரசுரங்களையும், புத்தகங்களையும் 'தோழர் குழாத்தினர்' வெளியிட்டு 'பொலிட் பீரோ' உறுப்பினர்களுக்கு வழங்கி வந்தனர்.

"ஜெயிலிலுள்ள ஜாமீன் கைதிகளின் துன்பத்துக்குப் பரிகாரம் தேடவேண்டும்!

மரணக்குகையிலிருந்து அரசியல் கைதிகளைக் கொண்டு "சென்று விடுங்கள்!" என்ற மகுடத்தின்கீழ் ஒரு சிறு புத்தகம் வெளிவந்தது. அதில் படங்கள் சிலவும் பதிக்கப்பட்டுள்ளன. அந்த ஏடு பின்வருமாறு பலாத்காரத்தைக் கக்குகிறது.

"...பொதுஜனங்களே எல்லோரும் முன்னேறுங்கள். இந்தக் கொலைகாரர்களை எதிர்த்து முன்னேறுங்கள்! இந்தக் கொலைகாரர்களின் பிடியிலிருந்து வீரக்கைதிகளைக் காப்பாற்றுங்கள்.

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, எல்லோரும் இந்தக் கொலைகார மந்திரி சபையை எதிர்த்துக் கண்டன ஊர்வலங்களை நடத்தத் தொடங்கவேண்டும்.

மாகாண ஜெயிலில் 150 கம்யூனிஸ்டுகள் பாதி இரவு நேரத்தில், காங்கிரஸின் 1,000 துப்பாக்கிகளை எதிர்த்துப் போரிட்டார்கள். அவர்களுடைய செயல்கள் உங்களுக்குத் தைரியம் அளிக்கட்டும்! இந்தக் கொலைகார மந்திரிகளுக்கும், அதிகாரிகளுக்கும் மரண தண்டனை கொடுங்கள்!

சகோதரத் தொழிலாளர்களே! போராடி வரும் உங்கள் சகோதரர்களை விடுதலை செய்வதற்காக, வேலைநிறுத்தம் செய்து, 144 வது பிரிவு தடையுத்தரவை மீறி ஊர்வலங்களை நடத்துங்கள்! மன்பாண்டத் தொழிலாளர்களைப் போல முதலாளிகள், அவர்களின் ஏஜெண்டுகள், போலீஸ் ஆகியோரின் தாக்குதல்களை ஏற்க முன்வாருங்கள்! ஆல்லன்பெரி பட்டறையின் தொழிலாளிகளைப் போன்று, தொழிற்சாலைகளைக் கைப்பற்றி, அங்கே செங்கொடியைப் பறக்கவிடுங்கள்! சிராம்பூர் தொழிலாளர்களைப் போன்றும், தென் கல்கத்தா பொதுஜனங்களைப் போன்றும், சர்க்கார் காரியாலயங்களைத் தாக்கி, அவற்றை அழித்துவிடுங்கள்! மாஹேஷ் தொழிலாளர்களைப்போல், போலீஸ் அவுட்போஸ்ட்களையும், ஜெயில்களையும் தாக்கி, உங்கள் சகோதரர்களான கைதிகளுக்கு விடுதலை அளியுங்கள்!

விவசாயச் சகோதரர்களே! போலீஸ் ஸ்டேஷன்களையும், சப்-ஜெயில்களையும், ஜில்லா ஜெயில்களையும் தாக்குங்கள்! ஜமீன்தார்கள், ஜோடுதார்கள், வியாபாரிகள் ஆகியோரின் களஞ்சியங்களிலுள்ள தானியங்களைக் கொள்ளையிட்டு, பசியால் வாடும் ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள்! நீங்கள் உழுது சாகுபடி செய்யும் நிலங்களை உங்கள் வசமே வைத்துக்கொள்ளுங்கள்! சிறை வாயில்களை உடைத்துவிட்டு, போராடிக்கொண்டிருக்கும் உங்கள் தோழர்களை வெளியேற்றுங்கள்!

மாணவர்களே! பெண்களே! 144 வது பிரிவின்படிக்கான தடையுத்தரவைச் சுக்குநூறாக்குங்கள்! காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களையும், சர்க்கார் அதிகாரிகளையும் தாக்குங்கள்! போலீஸ், இராணுவம் ஆகியவற்றிலே, கீழ் அந்தஸ்திலுள்ளவர்களை நம் பக்கம் திருப்பிக்கொள்ளுங்கள்! அரசியல் கைதிகளைக் காப்பாற்றுவதற்கு மரணத்தையும் திரணமாக மதித்து நீங்கள் முன்னேறியிருக்கிறீர்கள். அவ்வாறே மறுபடியும் முன்னேறுங்கள்!

சகோதரத் தொழிலாளர்களே! உங்களின் வீரச் சகோதரர்கள் மரணத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். உங்கள் சம்மட்டிகளை ஓங்கி அடக்குமுறையாளர்களின் தலைகளில் அடியுங்கள்! கைதிகளைக் காப்பாற்றி, போராட்டத்தில் முன்னேறுங்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஹர்த்தால் ஏற்பாடு செய்யுங்கள். ஓரிடத்தில் ஹர்த்தால் நடத்திய பிறகு அதை அடுத்துள்ள தொழிற்சாலையின் முதலாளிகளையும், அவர்களின் ஏஜெண்டுகளையும் தாக்கி, அங்கேயும் ஹர்த்தால் உண்டாகச் செய்யுங்கள். 144 தடை உத்திரவை மீறுங்கள். உங்கள் சொந்தப் பிரதேசங்களிலே கூட்ட

இந்நாளில் வெளிவந்து ஏளனம் செய்குதையா!

கூறுகூறாகக் கிழித்தெறியுங்கள்!

★

1949-ம் ஆண்டு ஜூன் 8-ம் நாள் "வங்காள மண்பாண்டக் கம்பெனி"யில் கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டுச் செய்த கலகத்தால் பெருங்குழப்பம் மூண்டது. அவர்கள் செய்த கலகத்தை கம்யூனிஸ்ட் கட்சி 'போராட்டம்' என்று வர்ணித்தது.

பின்னர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தோழர்களை மீண்டும் வேலையில் அமர்த்திக்கொள்ள மறுத்ததற்காக, அங்குள்ள மானேஜரைத் தாக்கிய மண்பாண்டத் தொழிலாளரின் சட்டவிரோதமான ஆக்கிரமிப்புச் செயலைப் பற்றிச் செய்திகள் விவரிக்கப்பட்டன.

★

1949 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 'உண்ணாவிரதம்' எனும் படநாடகத்தைத் துவக்கி, மக்களிடம் அனுதாபத்தைப் பெற முயன்ற 'மாஸ்கோ ஏஜண்டுகள்' தம் தோழர்கள் யாவர்க்கும் இத்தகு முறையைப் பின்பற்றச் செய்தனர். திரை மறைவில் இவர்கள் தின்று தீர்த்த உணவு வகைகள் சொல்லும் தரமன்று! துப்பாக்கிப் பிரயோக நிகழ்ச்சி பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சி மேலும் விடுத்த அறிக்கை இது:

- கொலைகார மந்திரிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் மரண தண்டனை கொடுங்கள்!
- நிராயுதபாணிகளான பாதுகாப்புக் கைதிகளைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொன்று உரிமை இல்லை. பொதுஜனங்கள், இவர்களைக் கண்ட துண்டமாகச் சிதைக்கவேண்டும்.

பிதன், நளினி, டட் - மஜும்தார் ஆகியோரையும் அவர்களுடைய அதிகாரிகளையும், துணைவர்களையும் பார்க்கின்ற இடங்களிலெல்லாம் தாக்குங்கள்! இந்தக் கொலைகாரர்களைக் கொல்வதே அவர்களுக்கேற்ற தண்டனை.

வேலை நிறுத்தங்களையும், ஊர்வலங்களையும் ஏற்பாடு செய்யுங்கள்! பிற்போக்கான காங்கிரஸ் தலைவர்களை உதையுங்கள்! பிற்போக்கு வழி வகுக்கும் சர்க்காரது காரியாலயங்களுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்துங்கள்! மந்திரிகளின் வீடுகளைத் தாக்கி, அங்கே குழப்பத்தையும், கொலையையும் உண்டாக்குங்கள்! ரத்தம் குறைந்து வருவதால் சிறையிலுள்ள உங்கள் சகோதரர்கள் பலவீனமாகிக் கொண்டு வருகிறார்கள். எனவே, சிறைச்சாலை வாயில்களைத் தாக்கி உங்கள் சகோதரர்களைக் காப்பாற்றுங்கள். நீங்கள் எங்கே இருந்தாலும், உடனே உங்கள் எல்லா வேலைகளையும் அப்படியே விட்டுவிட்டு, கண்டன ஊர்வலங்களை முன்னின்று நடத்தி, இந்தக் கொலைகார மந்திரிகளைத் தாக்கி நிர்மூலமாக்குங்கள்! தங்கள் உயிரையே தியாகம் செய்த உங்கள் வீர சகோதரர்களின் நினைவு, உங்களுக்குத் தைரியம் கொடுக்கட்டும்! மரணத்தையும் பொருட்படுத்தாமல் முன்னேறுங்கள்!

கொலைகாரர்களுக்குத் தண்டனை கொடுங்கள்!

கல்கத்தா நகர் (யூனிட்) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

மாகச் சேர்ந்து ஊர்வலமாகச் சென்று, அந்த இடங்களிலுள்ள சர்க்கார் ஊழியர்களை நன்றாக அடியுங்கள். இந்தியத் தேசிய தொழிற்சங்கம், காங்கிரஸ் ஆகியவற்றின் காரியாலயங்களை உடைத்தெறிந்து நெருப்பிட்டுக் கொளுத்துங்கள். சிராம்பூர், பாரக்பூர் தொழிலாளர்களைப் போன்று, அதிக அளவுள்ள ஆட்களுடன் சென்று, அங்கங்கே உள்ள ஜெயில்களையும், போலீஸ் அவுட்போஸ்டுகளையும் தாக்குங்கள். காங்கிரஸ் மந்திரிகளின் வீடுகளையும், காரியாலயங்களையும் சென்று தாக்குங்கள். நகர சர்க்கார் காரியாலயங்களைக் கொளுத்துங்கள். அங்கிருந்து ஊர்வலமாகப் போய் அரசாங்க தலைமைக் காரியாலயத்தையும் ரைட்டர் கட்டிடத்தையும் ஜெயில் வாயில்களையும் தாக்குங்கள். கைதிகளின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்குமாறு வற்புறுத்துங்கள். உங்கள் தாய்மார்கள், சகோதரிகள், ஆகியோர் மீது இழைக்கப்பட்ட அவமரியாதைக்கு ஏற்ற பதில் அளியுங்கள். கைதிகளின் மரணத்துக்காக வஞ்சம் தீர்த்துக்கொள்ளுங்கள்.

—எம். ஸ்டாலின்ராஜ்.

---

1. பிதன்ராய்: டாக்டர் பிதன் சந்திரராய். (மேற்கு வங்கப் பிரதமர்)
2. ஆர். குப்தா: உள்நாட்டு போலீஸ் இலாகா காரியதரிசி
3. ஹைதர்: டெபுடி கமிஷனர்.
4. நளினி: மேற்கு வங்க நிதியமைச்சர்.

அதிர்ச்சி வைத்தியம்!

★ பல முனைகளிலிருப்பவர்களும் தி. மு. கழகத்தின்மீது தொடுத்துவரும் ஏசல் கணைகளுக்கு 'அதிர்ச்சி வைத்தியத்'தின்மூலம் பதில் சொல்லியிருக்கிருர் தோழர் டிட்டோயிஸ்ட் ★

★ "திராவிட கோஷம் மூன்று கோடித் தமிழரின் அல்லது 10 கோடித் தென்னவரின் உள்ளத்திலிருந்து எழுந்த கோஷமல்ல. அது ஈ. வே. ரா, அண்ணுத்துரையின் கற்பனையிலிருந்து உதித்தது"

—ஸ்ரீமான் ஐக்கியத் தமிழகம்.

◉ ஐயோ பரிதாபம்! சோஷலிச - கம்யூனிச சித்தாந்தங்கள் மட்டும் 3 கோடி தமிழரின் அல்லது 36 கோடி இந்தியத் துணைக் கண்டத்தவரின் ஏகோபித்த கோஷங்கள் போலும்! அதனுல்தான் நேரு முதல் ஜீவா வரை கோஷித்துக் கொலுவேச்சுகிருர்கள் போலும்! மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இதயத்திலிருந்து வந்ததில்லை போலும்! ஒரே நாளில் ஒரே நிமிட்த்தில் ரஷ்யா, சீனு, கிழக்கு ஐரோப்பிய நாட்டு 100 கோடி மக்களின் உள்ளத்திலும் 'டபார்' என்று தோன்றி 'குபீர்' என்று ஆட்சிக்கேறி விட்டதுபோலும்! இன்னும் எதிர்க்கட்சியாகத்தானிருப்போம்; வங்கத்திலும் கேரளத்திலும் மட்டும்தான் கோலோச்சுவோம் என்று பாலக்காட்டு 'மறுமணத்திற்குப்' பின் கருதி இறங்கிக் கூறவேண்டிய காரணம் என்ன? 'கொள்கை சரியா தப்பா? நாட்டுக்கு நலம் பயக்குமா இல்லையா! ஆதிக்கம் உண்டா இல்லையா?' என்று பார்த்தல்லவா விமர்சிக்கவேண்டும்! நாங்களொன்றும் 'சட்டிமுனை'யில் திராவிடம் அமைக்கச் சொல்லவில்லையே! மக்களிடம் பிரத்யட்ச ஆதிக்க, சுரண்டலைச் சுட்டிக்காட்டிக் கோருகிருேம்!

★ "திராவிடப் பிரிவினை கோஷம் சீர்குலைவானது, பிளவுண்டாக்குவது, குறுகிய மனப்பான்மை"

—தமிழ்நாடு பரந்த கண்ணேட்ட யூனிட்டின் எஜமான விசுவாசத் தீர்மானம்.

◉ உலகம் ஒன்றெனக் கொள்ளும் 'வெண்டல்வெல்கி' வாரிசுகாள்! யாதும் ஊரே என்று ஓதித்திரியும் உத்தமர்காள்! சென்ற 17-12-56ல் உங்கள் எஜமானன் புல்கானின் காபூலிலே பக்துனிஸ்தான் பிரிவினையை ஆதரித்துப் பேசினுரே! அதைக் கண்டிக்கத் திராணி உண்டா? சீர்குலைவு என்று கூறமுடியுமா? மாஸ்கோ அடிமைகள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சிவேண்டும்? ஜெர்மனியைக் கூறுபோட்டு, சீர்குலைத்து, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா-ரஷ்யா நான்கு வல்லரசுகளும் ஆளுகின்றனவே! இதைக் கண்டிக்கத் திராணி உண்டா? பல்வேறு கலாச்சார தேசிய இனங்கள் சோவியத் யூனியனில் கூட்டாக வாழ்வதாகப் பறைசாற்றுவோர் பக்துனிஸ்தானுக்குக் கூறும் காரணம் திராவிடத்திற்கு ஏன் இல்லை?

★ "நாடு என்ருல் என்னவாம்? இந்தக் குஞ்சுகள் நமக்குப் பாடம் போதிக்க முன்வருவது விந்தையே! இந்த நாடு பூராவிலும் மொழிவழி ஆட்சி ஏற்பட்டபின் வடநாடு தென்னுடு என்ற பேதத்திற்கு சமாப்தி கட்டிவிட்டபின், ஆந்திரா பிரிந்தபின் திராவிடம் ஏது?"

—வழுக்கி விழுந்த எழுத்தாணி

◉ ஆந்திரா பிரிந்துவிட்டால் திராவிடம் இல்லையா? அப்படியாலுல் ஐக்கிய இந்தியா மட்டும் உண்டோ? ஆந்திரா, பிரியுமுன் அந்த ஐக்கிய இந்தியா இருந்ததில்லையா? தனி சுதந்திரத் திராவிடத்திலிருந்து தமிழ் நாட்டை மட்டும் தனியே விட்டுவிட்டு ஆந்திரா இன்ெனுரு நாடான இந்தியா (ஆரியவர்த்தம்) வில் சேர்ந்துவிட்டதா? அப்போதும் எஜமானன் டில்லிதான்! இப்போதும் அப்படித்தான்! ஆந்திரா பிரிவினை மொழிவழி மாநிலம் உருவானதே! இது தி. மு. க. லட்சியத்திற்கு இன்று கைகூடும் திட்டத்தின் ஒரு பாகம்! பாரதமாதாவின் முன்தானி பர்மா, வலதுபஜம் பாகிஸ்தான், பாதம் - இலங்கை போன பின்னும் பாரதமாதா சிதையாமல் உருக்குலையாமல் இருக்கிருளோ? சித்தூர் திருத்தணி எங்கே? தேவிகுளம் பீர்மேடு எங்கே? அவையில்லாததால் தமிழ்நாடு இல்லையா? அதனுலே தமிழ்மொழி கலாச்சாரம் தமிழராட்சி பற்றிப் பேசக் கூடாதெனக் கூறுதற்கியலுமோ? என்னதான் பேசினுலும் 'திராவிட உத்கலவங்க' என்ற வாழ்த்து அகில இந்தியாக்கள் வாயிலும் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. மனேன்மணியம் சுந்தரம் பிள்ளையும் 'திராவிட நற்றிருநாடு' என்றே பாடிப் போந்தார்.

★ "The slogan of DMK is disruptive and undemocratic"—

—ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு எடுபிடிகளின் விசுவாசப் பிரமாணம்.

—New Age, 6-1-57.

◉ விடுதலை கோருவது துவேஷமாம்! இவர்கள் மட்டுமென்ன வெள்ளையரோடும் அமெரிக்கரோடும் இரவும் பகலும் கொஞ்சி விளையாடுகிருர்களா நமக்கு மாருக! அந்நாட்டிலும் தொழிலாளப் பெருமக்களும் கம்யூனிஸ்டுக் கட்சியும் உண்டே! பின் ஏன் ஒட்டுமொத்தமாக துவேஷம்? "எவ்வளவு ஊழலிருந்தாலும் செலவழிக்கப்படும் 6000 கோடி ரூபாயிலே பின்தங்கிய பிரதேசமாம் எங்களுக்குரிய பங்கைத் தா" என்று கோருவது துவேஷமா? இன வெறியா? ஒன்றரையணு கூலி உயர்வுமட்டும் பொருளாதாரமா? இவர்களை மாத்திரம் என்ன முதலாளிகள் "நல்ல சம்பந்திகள், உறவினர், நன்கு மதிப்புத் தருகிருர்கள்" என்று 'சர்டிபிகேட்'டா தருகிருர்கள் எமக்கு மாருக! வேலூரில் ராமமூர்த்தி தி. மு. கவை "Creating Hatred & Confusion" என்று வர்ணித்ததாக 'மெயில்' இதழ் வெளியிட்டது, அதே மெயில் இதழ்தான் 20-1 57ல் பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் பண்டித நேரு, "The Communist Party is spreading hatred. disunity and chaos" என்று குறிப்பிட்டதாக வெளியிட்டது. ஏகாதிபத்திய வாதிகளின் 'கோயபெல்சிசம்' இப்படித்தானிருக்குமென்பதற்கு இந்த இருவரின் பேச்சுக்கள் எடுத்துக்காட்டு! இந்த 'பீ ஆர்கள்'தான் வெளிநாட்டுக் கொள்கையிலே நேருவின் தோளோடு நிற்பவர்கள்! ஆனுல் நாம் நேருவை உதாரணம் காட்டினுல் அது முதலாளித்துவ தாசமாம்! தெலிங்கானு கண்டவர்கள் நம் கோஷத்தை undemocratic என்று சொல்ல என்ன அருகதை உண்டு? நாமென்ன துப்பாக்கி முனையிலா திராவிடம் கோருகிருேம்?

★ "நான்சென்ஸ் என்று சொன்னுர். ரயிலை நிறுத்தினேம். அதற்காக ஓட்டுப் போடு என்று தி. மு. க. கேட்கும்."

—துருப்பிடித்த எழுத்தாணியின் மார்க்சிய சிந்தை.

◉ ஜனவிரோதக் காங்கிரசை முறியடிக்க, முதலாளித்துவத்தை ஒழிக்க கம்யூனிஸ்ட் கட்சி ஓட்டுக் கேட்குமாம்! மற்றக் "கட்சி முதலாளித்துவம் வாழவா ஓட்டுக் கேட்கும்" என்று இப்படியும் திருப்பிக் கேட்டால் என்ன கூறும் எழுத்தாணி? "குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு வாக்கெடுப்பின்போது கான்பூருக்கு ஓடிவிட்டேன், அதற்காக ஓட்டுப் போடு" என்று கேட்க எங்களால் முடியுமா? நாங்கள் வழி தவறவில்லை, நான்சென்ஸ் என்று சொன்னுல் பாடம் புகட்டுவோம். இவர்களுக்குத்தான் சொந்த மூளை கிடையாது. எனவே பண்டித நேரு, "Sheer nonsense and humbug" என்று கூறினுலும் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது! மறுக்க முடியவில்லை! "bankruptcy of mind" என்கிருர்! மௌனத்தின் மூலம் இவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! நம்மால் முடியுமா?

★ "அண்ணுத்துரை காமராஜர்மீது குணளா மணளா என்று வலைவீசிப் பார்த்தார். காமராஜர் அந்த வலையில் சிக்கவில்லை. அதனுல் ஆத்திரமடைந்த தி. மு. க. அவரைத் திட்டுகிறது எதிர்க்கிறது".

—பீ ஆர்களின் புது கோயபல்சிசம்.

◉ கோயபல்ஸ் அஸ்திகூட இந்நேரம் சிரித்துக் கொண்டிருக்கும், நல்ல வாரிசு தோன்றிவிட்டாரென்ற மகிழ்வால்! இங்கொன்றும் அங்கொன்றுமாக ஓரிரு வார்த்தைகளைப் பிய்த்து ஒட்டிக் கயிறு திரிப்பது ஜனசக்திக் கூடாரத்துக்கு இப்போது தவிர்க்க முடியாததாய்விட்டது! அத்தியர்யம் கடைசி என்று அவர்களே கருதிவிட்டார்களோ என்னவோ? "பால் குடித்து குழந்தை இறந்துவிட்டதாமே! பால் கொக்குபோல, கொக்கு கைபோல, இந்தக் கை உள்ளே போனுல் எப்படிப்பிழைக்கும்" என்ற மாதிரியான விமர்சனம்தான் இன்று அவர்களுக்கு மார்க்சியம்! நாமும் இதைக் கேட்டால் 'கழுதையைப் பத்திச் சென்ற மகனும் தகப்பனும் புத்தி சொன்னவர் கூற்றைக் கேட்டு கழுதையைப் பாலத்தில் விட்ட கதையைத்தான் நினைவிற்கு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது பொருட்படுத்தாமல்! எனினும் அதையும் நம்பும் பாட்டாளி சோதரர்களுள்ளாரே, அவர்களுக்காக ஒரு சில கூறி வைப்போம்!

காமராஜர் ஆட்சிக்கு வந்ததே குலக்கல்வித் திட்டம் திணித்ததால் எழுந்த எதிர்ப்பைத் துணைகொண்டு! ஆட்சியேறிய பின் அதை நீக்கினுர். அதற்கு தி. மு. கழகம் பாராட்டிற்று! அப்படிப் பட்ட குணளர் 'நான்சென்ஸ்' என்று கூறிய பண்டிதரின் நாத் துடுக்கை அடக்க ரயில் நிறுத்திய தோழர்கள் குண்டடிபட்டு, வழக்கில் அவதிப்படுவதைக் கவனியாதது ஏன்? ஏன்? ஏன்? என்று பகிரங்கமாகவே அண்ணு தம் இதழில் குறிப்பிட்டு அதன் மூலம் அவர் டில்லியின் கங்காணி, எனவே பராமுகமாயிருக்கிருர் என்பதைக் குத்தாமல் குத்திக் காட்டினுர்! இது எங்கே பரந்த கண்ணேட்டத்திற்கு புரியப் போகிறது? அங்குதான் 'bankruptcy' ஆகிவிட்டதே! அதுவும் குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு வாக்கெடுப்பு நாள் இனக் காவலருக்காதரவாக கான்பூருக்கு ஓடிவிட்டவரால் எப்படிப் பாராட்ட முடியும்?

உண்மையில் ஸ்டுடியோவிலும், சினிமா தியேட்டரிலும் அண்ணுவைக் காணவந்து வலைவீசியது காமராஜரே என்பது நமக்குத் தெரியும். அதை நாம் கூறுவதைவிட இதோ "பேரிகை" 21-5-56ல் தேதிய வாசகம்: "காமராஜ் தி. மு. கழகத்தைக் காக்காய் பிடிக்க வலை வீசினுர். தி. மு. கழகத்தார் காமராஜரை நெருங்கவிடவில்லை. இவர் ஒரு சாண் அவர்கள்பக்கம் நெருங்கினுல் அவர்கள் இன்ெனுரு பக்கம் ஒரு முழம் ஒதுங்கிவிடுகிருர்கள். ஒரு தேநீர்க் கச்சேரியில் காமராஜர் அண்ணுத்துரையிடம் கேட்டார் "உங்களுக்கு கல்லக்குடி என்ற பெயர் வேண்டுமானுல் மாற்றம் செய்து தருகிறேன். இது வெளியே தெரிய வேண்டாம்" என்று. அதற்கு அண்ணுத்துரை: "இப்படியெல்லாம், ரகசியமாகச் செய்ய வேண்டியதல்ல இக்காரியம். பகிரங்கமாகப் போராடினேம், பகிரங்கமாகவே வெற்றி வேண்டும்" என்ருர். தூத்துக்குடி வழக்கு பற்றிக் காமராஜர் குறிப்பிட்டபோது அண்ணுத்துரை கூறினுர்: "தூத்துக்குடி வழக்கு உயர்நீதிமன்றம் வரை வந்து உரியநீதி பெறவேண்டுமென்பதே என் ஆசை. எவர் தயவிலும் வளர்ச்சி பெறுவதை விரும்ப மாட்டேன்"......இதுதான் பேரிகைதரும் தகவல். உண்மை இப்படியிருக்க, செக்கரடேரியட் ஹாஸ்டல் விழாவில் மணளர் காமராஜருக்கு குணளி வேஷம்போட்டு சேலை கட்டியவர்கள்தான் நாம் "மணளா" என்று வலைவீசியதாகக் கூறுகிருர்கள், பரிதாபம்! சென்ற தேர்தலுக்கு முன்பு மாநில மாநாட்டிலே நான்கு நாள் தவம் கிடந்து 'பந்தியில் இடமில்லை' என்றவுடன் இன்று 'இலை பொத்தல்' என்று கூறுவது மிகவும் வேடிக்கை.

முகவரி மாற்றம்:

வே. கபிலன்,
89, சஞ்சீவிராயன் கோவில் தெரு,
சென்னை-21.

அறிவிப்பு

சென்னை, எழும்பூர் தொகுதியில் தி. மு. க. அபேட்சகனுக சென்னை சட்டசபைக்குப் போட்டியிடுகின்ற என்னைப்பற்றி, எனக்கு அறிவிக்காமலும் என் அனுமதியின்றியும் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் விளம்பரங்கள் முதலிய எவையும் என்னைக் கட்டுப்படுத்தமாட்டா என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
க. அன்பழகன்

சென்னை,
16—2—57.

★ ஒய்யாரக் கொண்டைகளின் ஓலம்! ★

தன் கூன் அறியாத ஒட்டகம் ஊர்க் கூனை நிமிர்த்தப் புறப்பட்ட கதையாகிவிட்டது இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நிலை. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது என்று சொன்னாலும் பொருந்தும். வெறும் வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு தேர்தல் அவல் கிடைத்தால் சொல்லவா வேண்டும்? வாய்க்கும் கைக்கும் வேலை பகு ஜோராக நடந்துகொண்டிருக்கிறது.

தேர்தல் சமயமல்லவா, ஏதேனும் சில்லறைத் தன்ங்கள் நடக்காமலா இருக்கும் என்று பொதுமக்களில் சிலர் வாளா கிடக்கலாம். அதற்கும் ஒரு எல்லை வேண்டுமல்லவா! எல்லையைத் தாண்டினால் என்ன ஏற்படும் என்பதை நாம் 'ஜனசக்தி'க்குத் தெரிவிக்கத் தேவையில்லை. தமது கைவரிசையை எவரிடம் காட்டினாலும் தி. மு. கழகத்தினரிடம் மட்டும் காட்டக்கூடாது எனும் விரதம் பூண்டு இருந்தவர்கள். எனவே தான் அவர்கள் நமது இயக்கத்துடன் இடை இடையே மோதுவதும், மோதுதல் முற்றத் தொடங்கினால் 'சமாதானப் புறா'வைப் பறக்கவிடுவதும் சர்வசாதாரணமான சம்பவம். இதைக் கடந்த தேர்தலிலும் கண்டோம்; அதற்கு முன்பும் பார்த்திருக்கிறோம்.

ஜனசக்தியை பழைய வாசஸ்தலமாகக் கொண்டவர்கள் இதை இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். அந்த அனுபவத்தில் இன்னும் பக்குவப்படாத புதிய 'ரெக்ரூட்டுகள்' இரண்டொன்றுதான் அவர்கள் விட்டு விலகிய பணியைத் தொடரும் திருப்பணியில் இறங்கி இருக்கிறார்கள். இவர்களும் விரைவில் உணருவார்கள் என்பதும் நிச்சயம். இந்தப் புதிய ரெக்ரூட்டுகள் 'எழுத்தாணி'யை ஏந்திக்கொண்டு தங்களை 'மாஜினி'யாகக் காட்டிவருகின்றன. இவர்களின் போக்கு இப்படியே நீடிக்குமானால் பொதுமக்கள் 'னி'யை நீக்கி 'மாஜி' யாக்கிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மாஜினிக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் நஷ்டம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் இந்த ஒரு கட்சியை நம்பி அவர் வாழ்க்கையைத் தொடங்கவில்லை. பத்துடன் பதினொன்று அத்துடன் இது ஒன்று என்ற முறையில், அனுபவித்த வரையில் லாபம் என்று இருப்பவர். அவரது வாழ்க்கை இன்றைக்கு ஓரளவு உருப்படியாக ஓடிக்கொண்டிருப்பதே தனக்கு ஒன்பதாம் இடத்தில் குரு பெயர்ந்திருப்பதால்தான் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருப்பவர்தானே? இது மட்டும் சாஸ்வத பதவியாக எப்படி அவர் இறுமாந்து இருக்கமுடியும்?

பொதுவாழ்வில் புகுந்தவுடனே நேரடியாகப் புகுந்த கட்சியும் அல்ல கம்யூனிஸ்ட் கட்சி. மரம் பழுத்தால் வெளவால்களை வாவென்று அழைக்கிறது? அப்படித்தான் இவரது கம்யூனிஸ்ட் கட்சிப் பிரவேசம். கம்யூனிஸ்ட் பழம் இனிக்கிற வரையும் இந்திரன், சந்திரன் என்பதும் தானிருக்கும் நிலைக்குத் தடுமாற்றம் ஏற்படுமானால் நாயே பேயே என்றும் எழுத்தைப் பிரயோகம் செய்து பழகிப்போன பொதுநலவாதியல்லவா ஸ்ரீமான் மாஜினியார்? அந்த அளவு எதையும் தாக்கும் – தாங்கும் இதயம் கொண்டவர், இன்றைய பொதுவுடைமைப் பூங்காவின் பாதுகாவலர்.

இப்படி நான் கூறுவதால் ஏதோ அவருக்கென இன்றைக்கு ஓஹோ என உயர்ந்து எழும் புகழுக்கு இழுக்கைத் தேட் இல்லாததையெல்லாம் இட்டுக்கட்டிக் கூறுவதாகச் சிலருக்குத் தோன்றக்கூடும். வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணி, குரல் பெருத்தவனுக்கெல்லாம் குழைந்து போகும் குணம் கொண்டோர் இருப்பார்களானால் அந்த அப்பாவி மக்கள் இந்த மாஜினியாரின் பூர்வாஸ்ரமத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறோம். அப்படித் தெரிந்துகொள்வதன்மூலம் மாஜினியாரின் கொள்கை உறுதியைப் புரிந்துகொள்ள முடியும்.

மாஜினியாரின் பூர்வாஸ்ரமப் பெயர் நா. ரெங்கசாமி என்பது. இன்றைக்குத் தன்னை 'மாஜினி'யாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறாரே அந்தப் பட்டத்தை ஈந்த பெருந்தகையாளர் யார் தெரியுமா? இன்றைக்கு 'டெய்லிடுப்' என்றும், 'தினவாந்தி' என்றும், பொது மக்களால் மிகவும் அன்னியோன்யமாக அழைக்கப்படும் தினத்தந்தி ஆதித்தனார் அளித்த திருப் பட்டம்தான் 'மாஜினி' என்பது. அந்தப் பெயரைப் பெறும்போது மாஜினியார் மதுரை தந்திரி இதழில் துணையாசிரியர் – தேசியத் திருமேனியாக வேடம் பூண்டவர். அப்பொழுது ஆதித்தனாரும் ஒரு காங்கிரஸ்வாதி. எஜமான் சொற்படி எதை எதையோ செய்வதாக பட்டினப் பக்கங்களில் பேசிக்கொள்வார்களே அந்தப் படிக்கு முதலாளியின் முகங் கோணாது தாசானுதாசனாக நடந்து அவரது இஷ்டத்துக்குத் தாளம் போட்டு வந்த தம்பிரான்தான் இந்த 'மாஜினி'. மாஜினியாரின் எழுத்து இப்படி ஏன் சாக்கடைப் பிரயோகமாக இருக்கிறது என்பது இப்பொழுதாவது புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

மாஜினியாரை மீண்டும் தொடருங்கள். அதன் பிறகு அவர் ஒரு சோஷலிஸ்ட். பின்னால் புரட்சிகர சோஷலிஸ்ட் – இப்பொழுது புடம் போட்ட கம்யூனிஸ்ட் – இதைத் தொடர்ந்து இன்னும் பல அவதாரங்களைத் திருவாளர் மாஜினியார் எடுக்கத்தான் போகிறார் என்பதை இப்பொழுதே வைத்துக்கொள்ளலாம்.

நிகழ்கால அவதாரத்துக்கு ஏற்ப இன்றைக்கு கம்யூனிஸ்ட் வேஷம் போடுகிறார் என்பதுதான் உண்மை. எனவே வேஷத்துக்கு ஏற்ப நடிக்க வேண்டுமல்லவா? நாய்வேடம் பூண்ட பிறகு குலைக்கமாட்டேன் என்று கூறினால் அந்த வேஷத்துக்குத்தான் மதிப்பிருக்குமா? நாடகக் குத்தகைக்காரர்கள்தான் திருப்திப் படுவார்களா? அதுதான் இன்றைக்கு நடக்கின்றது.

கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்வார்கள், என்பதைப் பிரத்யட்ச உண்மையாகத் தெரிவிக்க அடிக்கடி ஒன்றைக் கூறியபடி இருப்பதைக் கேட்டிருக்கிறோம். ரஷ்யாவைப் பார்! சீனாவைப் பார் என்று தொடர்பு விடாமல் பேசுவதையும் கேட்டிருக்கிறோம். கம்யூனிஸ்ட்டுகளின் சாதனைக்குச் சாதகமாகக் காட்டப்படும் செஞ்சீனாவில் வேறு பல நல்ல அம்சங்களும் இருக்கின்றன என்பதை மட்டும் இவர்கள் கவனிக்க மறுக்கிறார்கள். சீனாவைப் பார்க்கும்போது அங்குள்ள விவசாய சாதனைகளும், இதர முன்னேற்றங்களும்தான் இவர்களது கண்களுக்குத் தெரிகிறதே தவிர அந்த நாட்டின் பெரியோர்கள் சொன்ன கருத்துக்கள் மட்டும் இவர்களுக்குத் தெரிய மறுக்கிறதே ஏன் என்பதுதான் தெரியவில்லை. உண்மையிலே இவர்கள் கண்களுக்குத்தான் அந்தப் பொன் மொழி படவில்லையோ அல்லது இவர்கள்தான் அப்படிப்பட்ட மொழிகளை ஒதுக்கிவிட்டு இதர அம்சங்களை மட்டும் பார்க்கிறார்களோ என்பதும் புரியவில்லை. நம்மைப் பொறுத்த மட்டில் இவர்கள் அப்படிப்பட்ட அறிவுரைகளைப் பார்க்க மறுக்கிறார்கள் என்றே கருத நேருகிறது.

இங்குள்ள கம்யூனிஸ்டுகள் பார்க்க மறுக்கும் சீனப் பழமொழிகளில் ஒன்று. "**மகத்தான மனிதர்**கள் கருத்துக்களைப் பற்றி விவாதிக்கிறார்கள். **சாதாரண மனிதர்கள்** நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்கிறார்கள். **மட்டமான மனிதர்கள்** தான் நபர்களைப் பற்றி விவாதிக்கிறார்கள்."

இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஏன் இந்த வாசகத்தைப் படிக்க மறுக்கிறார்கள் தெரியுமா? இவர்களின் போக்குக்குப் புறம்பாக அந்தக் கருத்தின் கடைசி வாக்கியம் இருப்பதால்தான் கம்யூனிஸ்டுகளின் கண்கள் பார்க்கக் கூசுகிறது என்று கருதுகிறோம்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசுகிற கம்யூனிஸ்ட் தலைவர்களிலிருந்து சாதாரணத் தொண்டர்கள் வரையில் தி. மு. கழகத்தைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் கூறத்தகாததைக் கூறி வருவதாக நமக்குத் தினந்தினம் செய்திகள் வந்தபடி உள்ளன.

"பணம் அடிப்பதுதான் தி. மு. க. தலைவர்களின் உள்நோக்கம்."

"தி. மு. க.வினருக்கு ஓட்டளித்தால் ஜனங்களிடம் காணமுடியாது.

"அண்ணாத்துரை எதை அறிந்தார்; அவர் என்ன அறிஞரா?"

"கருணாநிதி கலைஞரா?"

இதுதான் கம்யூனிஸ்டுகளின் பொருள் முதல் வாதம்.

இராமநாதபுரம் மாவட்டத்திலும் இதர மாவட்டத்திலும் இதை விடக் கீழ்த்தரமாகவே பேசி வருகிறார்கள்.

கம்யூனிஸ்ட் நண்பர்கள் நாம் கூறுவதை நம்ப மறுத்தால் இப்பொழுதுள்ள 'டேப் ரிகார்டு' வசதியை உபயோகித்து அந்தப் பேச்சை ஒருமுறை கேட்டுப் பார்க்கட்டும்; அப்பொழுது புரிந்துகொள்வார்கள். இதைக் கேட்டு வேறு ஒரு ஆத்திரம் கூடக் 'காம்ரேடு'களுக்கு எழலாம். டேப் ரிகார்டு வைத்துக்கொள்ளும் அளவுக்கு எங்களுக்குப் பணவசதி ஏது? நாங்கள்தான் பாட்டாளிகளின் கட்சியினராயிற்றே என்று பாவலா பண்ணவும் கூடும். இவர்கள் பாட்டாளி வர்க்கத்தினருக்குக் கட்சி நடத்துகிறார்களா? அல்லது பணவர்க்கத்தினருக்குக் கட்சி நடத்துகிறார்கள் என்பதை இவர்களின் விமானப் பிரயாணமும், ஆள் ஒன்றுக்கு சராசரி 500 முதல் 1000 வரை செலவு செய்துகொண்டிருப்பதிலிருந்துமே மக்கள் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள். பாட்டாளிகளுக்காக அல்லும் பகலும் அனவரதமும் இரத்தம் சிந்தும் இவர்களுக்கு இவ்வளவு வசதியுடன், பணம் படைத்தவனால் வாழக் கூடாத அளவு பவ்யமாக வாழ்க்கையை நடத்த முடிகிறது என்பதையும் அவ்வளவுக்குத் தேவையான பணம் எப்படிக் கிடைக்கிறது என்பதைப் பற்றியும் பின்னால் கவனிப்போம். டேப்ரிகார்டுக்காக இவர்கள் எங்கும் அலையத் தேவை இல்லை. இத்துணைக்கால ஊடலுக்குப் பிறகு தேர்தல் காரணமாகக் கூடலில் நெருங்கி இருக்கும் மறத்தமிழர் ம. பொ. சிவஞானத்திடம் சென்று ஒருநாள் இரவலேனும் பெற்று வரச் சிபார்சு செய்கிறோம். உண்மை இப்படி இருக்க; உரைக்க முடியாத வார்த்தைகளால் தி. மு. கழகத்தைச் சொல்லாபிஷேகம் செய்துகொண்டிருக்கும் இவர்கள் வேஷம் கலைக்கப்படுகிறது – திரை கிழிக்கப்படுகிறது என்பது தெரிந்தவுடன் தி. மு. கழகத் தோழர்கள் மீது பழிசுமத்தும் பணியில் இறங்கி இருக்கிறார்கள்.

சீனப் பழமொழி செப்புவது போல நபர் விமர்சனம் செய்பவர்கள் தி. மு. கழகத்தினர்கள் அல்ல– நிகழ்ச்சி விமர்சனங்களையும் முழுநேர வேலையாகக் கொண்டவர்களும் அல்ல. கருத்துக்குக் கருத்து மோதவேண்டுமே தவிர தனி நபர் விமர்சனம் சிக்கலைத் தீர்க்காது என்பதில் தெளிவு கொண்டவர்கள் நாம். எனவே மறந்தும் தி. மு. கழகத்தவர் இப்பொழுது இவர்கள் சென்றுகொண்டிருக்கும் பாதையில் கால்வைத்து நடக்கமாட்டார்கள்.

இவ்வளவையும் நாம் கூறுவதும் ஏதோ இட்டுக்கட்டி இவர்களுக்கு இழிவை உண்டாக்க வேண்டுமென்னும் நோக்கத்தால் அல்ல. நாம் கூறும் அத்தனையும் அப்பழுக்கற்ற உண்மை என்பதை விளக்க ஒரு சான்று தருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தத் தேர்தலில் எப்படியேனும் தோற்கடித்தே தீரவேண்டும் என்று முள்ளு முனையில் தவங்கிடக்கும் – அதற்காக எவ்வளவு கீழ்த்தரமான பிரச்சாரத்திலும் ஈடுபடப் பின் வாங்காத விடுதலை ஏடே ஜனசக்தியின் நரகல் நடையைப் பாராட்டி,

"கடந்த இரண்டு வார காலமாக ஜனசக்தி கண்ணீர்த்துளிக் கட்சியையும் அதன் தலைவர்களையும் நன்கு குடைந்து வருகிறது" என்று எழுதுகின்றதென்றால் இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

பாம்பின் கால் பாம்பு அறியும் என்பார்கள். விடுதலையின் கீழ்த்தரமான நடையை நாடறியும். அப்படிப்பட்ட ஒரு அழுகல் ஏட்டின் 'சர்டிபிகேட்' பெறும் தகுதியை ஜனசக்தி பெறுமானால் ஜனசக்தியின் பிரச்சாரத்தின் போக்கைப் புரிந்துகொள்ளப் பொதுமக்களுக்கு வெகுகாலம் பிடிக்காது.

—வெற்றிவீரன்.

மார்ச் 14ம் தேதியன்று
சென்னை
அண்ணாமலை மன்றத்தில்
கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
அவர்கள் தலைமையில்
சேர சோழ பாண்டிய நாடக மன்றத்தாரின்
"மனோன்மணி"
நாடகம் நடைபெறும்.

பாதி பாதி

இந்தியப் பெண்களுக்கு, 'அழகாக இருப்பது எப்படி' என்ற யோசனையைக் கூற பாரிஸ் அழகி வந்திருக்கிறாள்.
—பத்திரிகைச் செய்தி.

இந்த யோசனையைச் சொல்ல எங்கள் காமராசர் போதுமே!
—காமராசர் பக்தர்.

★

நெல்லையில் கம்யூனிஸ்டு - பி. சோ-தமிழரசுக் கழகம் கூட்டுத் தேர்தல் கமிட்டி.
—பத்திரிகைச் செய்தி.

ஐயோ அப்பாயுசே!
—கிண்டல் பார்வழி.

★

காங்கிரஸ் ராமராஜ்யம் எங்கே?
—அஜய் கோஷ்.

உங்கள் 'காம்ரேடுகள்' வசிக்கும் அண்டர் கிரவுண்டுக்குள் புதைந்திருக்கும்.
—விஷயம் தெரிந்தவர்.

★

மக்களின் நல்வாழ்வுக்கான போராட்ட காலத்தில் புராண லீலைகள் பேசிய தி. மு. கக் களுக்கு ஓட் கேட்க என்ன உரிமை உண்டு?
—பாவலி.

இல்லையில்லை மக்கள் அமைதியாக வாழ்ந்தபோது அண்டர் கிரவுண்டிலிருந்து கொண்டு அட்டகாசம் செய்த காம்ரேடுகளுக்கு மட்டும்தான் ஓட் கேட்க உரிமை இருக்கிறது!
—பொதுஜனம்.

★

மந்திரி சுப்ரமணியம் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்ட காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு ஆட்கள் சேராததால் மேற்படி கூட்டம் ரத்து செய்யப்பட்டது.
—பத்திரிகைச் செய்தி.

ஐயோ பாவம்! என் பிரதம சிஷ்யன் சுப்ரமணியத்துக்கா இந்த நிலை வரவேண்டும்?
—ஆச்சாரியார்.

★

நல்லதொரு எதிர்க்கட்சியுடன் போராடவே எனக்கு ஆசை. ஆனால் அப்படிப்பட்டது ஏதுமே காணோமே.
—நேரு பண்டிதர்.

கண்ணை மூடிக்கொண்டு உலகத்தைப் பார்ப்பவருக்கு எதுதான் புரியும்?
—விஷயம் தெரிந்தவர்.

★

காங்கிரஸ் இனி ஒருபோதும் தொண்டு செய்யும் ஸ்தாபன மல்ல.
—கிருபளானி.

தயவுசெய்து இதை நமது காமராசரின் காதுலே சத்தம் போட்டுச் சொல்லுங்கள்.
—உண்மை தெரிந்தவர்.

தேர்தலுக்குப் பின் மாபெரும் சக்தி ஆவோம்.
—ஒரு காம்ரேட்.

சொல்லுங்கள் சொல்லுங்கள்! இப்படி எத்தனையோ முறை சொல்லிவிட்டீர்கள்! சகதியாகத் தான் ஆகியிருக்கிறீர்களே தவிர சக்தியானதாகத் தெரியவில்லை
—விபரம் அறிந்தவர்.

★

பாலதண்டாயுதத்தையும் மற்ற அரசியல் கைதிகளையும் விடுதலை செய்.
—ஒரு காம்ரேட்.

அடாது அலறினாலும் விடாது சிறை வைப்போம்.
—அரசியலார்.

★

மக்களுக்கு நன்மை செய்யவே மந்திரி வேலை.
—காமராசர் சொன்னது.

நிஜமாகவா? நாம் இதுவரை எந்த நன்மையையும் செய்ய வில்லையே!
—ராமநாதபுரம் ராஜா சொல்லாதது.

★

பெரியார் ஈ. வே. ராமசாமிக்கு ரத்தக்கொதிப்பு அதிகரித்திருக்கிறது.
—செய்தி.

உள்ளக் கொதிப்பு அதிகரிக்க அதிகரிக்க ரத்தக் கொதிப்பும் அதிகரித்து வருகிறதோ?
—சந்தேகி.

★

சீதை பத்தினியா, தமிழச்சிக்குத் தாலி உண்டா என்ற ஆராய்ச்சியில் நாங்கள் இறங்க வில்லை.
—ஒரு காம்ரேடு சொன்னது.

ஆனால் தமிழ் மக்களை எப்படி, பட்டினிப் பட்டாளமாக ஆக்குவது, தமிழகத்தை எப்படி ரஷ்ய நாயகர்களுக்கு அடிமைப்படுத்துவது என்ற ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டிருக்கிறோம்.
—அவர் சொல்லாதது.

ஓவியத்தின் உயர்வும், சிற்பத்தின் சிறப்பும்
இணைந்த அற்புதம் புகைப்படம்!

புகைப்படம் எடுக்கும் கலைக்குப் புகழ் வாய்ந்த இடம்

அழகப்பா ஸ்டூடியோ,

கீழராஜ வீதி :: புதுக்கோட்டை.

ராம் ரேடியோ சர்வீஸ்
டீலர்ஸ் அண்ட் இஞ்சினியர்ஸ், புதுக்கோட்டை

PHILIPS

பி லி ப் ஸ்

★ ரேடியோ
★ ஒலிபெருக்கிக் கருவி
★ இன்பிராபில் லாம்ப்
★ பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்வீஸ் செய்து தரப்படும்.

— விவரங்களுக்கு: —

ராம் ரேடியோ சர்வீஸ்
தபால் பெட்டி நெ. 2
கீழராஜ வீதி :: புதுக்கோட்டை

நன்மணம் சேர்க்கும் நலமதனைத் தானல்கும்
அன்னை பத்தியென்றே அறி!

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி
சித்த வைத்தியசாலை.
57 வருட அனுபவம் பெற்றது

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெர்ப்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெர்ப்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெர்ப்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெர்ப்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெர்ப்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனாம்.
பிரதம வைத்தியர் and மானேஜர்:—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஒப்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்தவைத்தியசாலை,
தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நா(டு)